தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1971 டிசம்பர் 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

வங்காள தேச அகதிகளுக்கு உதவி

** 186 வினா*—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வங்காள தேசத்திலிருந்து வரும் அகதிகளுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து பணம் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் நாடு வங்காள தேச Bangla Desh) உதவிக் குழுவுக்கு முதலமைச்சர் துயர் தணிப்பு நிதியிலிருந்து, ரூ. 25,000 உதவித் தொகையாக 1—6—1971 அன்று வழங்கப்பட்டுள்ளது.

உதகையிலுள்ள 'தமிழகம்'

*** 187 வினா**—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் (ஊட்டி) உள்ள 'தமிழகம்' விடுதியில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குவதற்குக் குறைந்த கட்டணம் வசூல் செய்யும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழக சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் உதகமண்டலத்திலுள்ள 'தமிழகம்' விடுதியில் தமிழக அரசு அலுவல் காரணமாகத் தங்கும்போது அவர்களிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசு சார்பற்றவர்களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி : சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது குழுக் கூட்டங்களுக்குச் சென்றுவிட்டு ஒருநாள் இரண்டு நாள் தொடர்ந்து தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒரு நாளுக்கு

30 ரூபாய் பணம் கேட்கிறார்கள். அது மிக அதிகமான தொகையாக இருப்பதால் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து குழுக் கூட்டங்கள் நடக்கும் காலத்தில் வாங்கும் தொகையையே தொடர்ந்து வசூலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குழுக் கூட்டம் முடிந்த பிறகு அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசுச் சார்பற்றவர்களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம்தான் இப்பொழுது வசூலிக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதகையில் இருக்கும் 'தமிழகம்' சட்ட மன்றம் கூடுவதற்காகவும், சட்ட மன்ற உறுப்பினர்கள் வசதிக்காகவும் முதன்முதலாக வாங்கப்பட்டது. அந்த நிலையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஓய்வுக்காக அதிக நாள் தங்காத நிலை ஏற்படுமானால், சாதாரணமாக அவர்கள் கமிட்டிக் கூட்டத்திற்காகச் சென்று தங்கும்போது அவர்களிடமிருந்து பெறும் அளவே வசூலிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்ட மன்றம் கூடுவதற்காக வாங்கப்பட்ட ஒரே காரணத்திற்காக சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பது இல்லை. இப்போதே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பல கோரிக்கைகள் 'தமிழக'த்தைப் பொறுத்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

திரு. மு. சுருளிவேல்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரிலுள்ள தமிழக அரசுச் சுற்றுலா மாளிகையில் தங்குவதற்கு இன்றையதினம் தனி அறைக்கு ரூ. 7.50ம், இரண்டு பேர் தங்கும் அறைக்கு 12 ரூபாயும் குடும்ப அறைக்கு 24 ரூபாயும் வசூலிக்கிறார்கள். எங்களைப் போன்ற சாதாரணச் சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் தங்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்து தயவு செய்து கட்டணத்தைக் குறைக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி கேட்டிருந்தால் பதில் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அதைப்பற்றி, இப்படியொரு கேள்வி வரும் போதுதான் கேட்க வேண்டிய அவசியம் தோன்றியிருப்பதால் அது ஒரு முக்கிய பிரச்சினையாகத் தோன்றவில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலுள்ள 'தமிழகத்'தில் எல்லாவித வசதிகளும் இருப்பதால் கோடைகாலச் சட்ட மன்றத்தை உதகையில் கூட்டும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லாவித வசதிகளும் நாட்டு மக்களுக்கு வாராத காரணத்தால் வசதிக் குறைவாக உள்ள இந்த இடத்திலேயே சட்ட மன்றத்தைக் கூட்டுவது நல்லது என்று கருதுகிறேன்.

1971 டிசம்பர் 9]

திரு. கா. காளிமுத்து : உதகையில் உள்ள ‘தமிழகம்’ என்னும் விடுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் எங்குமுள்ள சுற்றுலா விடுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

வளர்மானப் பணிகள் பற்றிய விளம்பரம்

*** 188 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை பத்திரிகை நிருபர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று வளர்ச்சிப் பணிகளை சுற்றிக் காண்பிக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னை மாநகரிலுள்ள இதழ்துறையாளர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளைச் சுற்றிக் காண்பிக்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இத் திட்டத்தின்படி, அண்மையில்—1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி முதல் 14-ந் தேதி வரை தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் “வீராணம் திட்டத்தையும்” தஞ்சை மாவட்டத்தில் உள்ள “தில்லையாடி வள்ளியம்மை நகர் திட்டத்தையும்” காண்பிக்க இதழ்துறையாளர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகள் அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கடந்த முறை பத்திரிகையாளர்களைச் சில மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுப் பயணம் செய்து வைத்ததால் நல்ல பலன் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. ஏனைய மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதற்கு முன்பே ஒரு தடவை எல்லா மாவட்டங்களுக்கும் பத்திரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அடுத்தும் அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்படிச் சென்றவர்கள் நல்ல நியாய உணர்வோடு தங்கள் பத்திரிகைகளில் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நல்ல கருத்துக்களையும் எழுதியிருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the over-publicity in radio and cinemas, is it necessary to have further publicity like this, spending Government money ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை மேலும் ஒரு விளம்பரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பத்திரிகையாளர்களும் நாட்டு நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டு